தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, பங்குனி 9, திருவள்ளுவர் ஆண்டு–2048

2017 மார்ச் 22, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

*"நயனொடு நன்றி புரிந்த பயன்உடையார்
பண்புபா ராட்டும் உலகு."*

அறத்தையும் நலத்தையும் பெரிதும் விரும்பிப் பலருக்கும் பயன்படும்படி உயர்ந்த வாழ்க்கையை வாழும் மக்களின் பண்பை உலகத்தார் அனைவரும் பாராட்டி மகிழ்வர்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

61—

யானைகள் காப்பகம்

***5621—திருமதி மு. பரமேஸ்வரி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மண்ணச்சநல்லூர் தொகுதி, சனமங்கலம் ஊராட்சியில் யானைகள் காப்பகம் அமைக்க அரசு முன்வருமா?

[2017 மார்ச் 22

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மண்ணச்சநல்லூர் தொகுதியை உள்ளடக்கிய திருச்சி மாவட்டத்தில் எந்த ஒரு வனப் பகுதியிலும் யானைகள் நடமாட்டம் தொன்றுதொட்டே-traditionally ஆக இல்லாத காரணத்தினால் மண்ணச்சநல்லூர் தொகுதி, சனமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் யானைகள் காப்பகம் அமைக்க வாய்ப்பில்லை. இருப்பினும், மண்ணச்சநல்லூர் தொகுதி, சனமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தின் அருகில் உள்ள பரமரெட்டிப்பாளையம் காப்புக் காட்டில் யானைகள் புனர்வாழ்வு மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள்.*

திருமதி மு. பரமேஸ்வரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விண்ணில் உதித்த துருவ நட்சத்திரமாக, கோடானுகோடி தமிழ் மக்களின் தலைமகளாக, செங்கோல் விடுத்து சேனை அமைத்து ஆட்சிக் கட்டிலை வழி நடத்தி வந்து அறம் பொருள் கொண்ட ஆதித் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) வந்தோரையும், சென்றோரையும் அரவணைத்து அன்னைத் தமிழ் உணர்வைப் பாலாக ஊட்டி, கருவிலிருந்து மனிதன் இறப்பு வரை திட்டங்களை உருவாக்கி ஆண்டதோர் இயக்கத்தினை மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர வைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) எனக்குப் பின்னரும் இந்த இயக்கம் 100 ஆண்டுகள் நிலைக்கும்; மக்கள் பணியாற்றும் என்று செங்குருதி புனலிட்டு சபதம் கொண்ட கழகத்தின் காவல் தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, முத்தான எனது முதல் வணக்கத்தை சமர்ப்பிக்கிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழி வந்த தியாகத் தலைவி பெருமதிப்பிற்குரிய சின்ன அம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம் கழகத் துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் அவர்களுக்கும் என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதையும்

2017 மார்ச் 22]

சிந்தனையுடன் சீர்தூக்கி உற்றுநோக்கிப் பார்க்கும் உன்னத குணம் படைத்தவர்கள். அவர்கள் வாழும் மக்களை கண்ணும் கருத்துமாய் பாதுகாத்ததுபோல், வன விலங்குகளையும் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து வந்தவர்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாட்சி நடைபெறும் இந்த நற்காலத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுக் கூறிய எனது தொகுதிக்குட்பட்ட சனமங்கலம் எம்.ஆர். பாளையம் காப்புக் காட்டில் அமைந்துள்ள யானைகள் புத்துணர்வு முகாமை, யானைகள் காப்பகமாக மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகளைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள் குறிப்பிட்டுக் கேட்டிருக்கிற யானைகள் முகாம் பற்றி ஏற்கெனவே நான் பதில் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும், பரிசீலனை செய்ய வேண்டுமென்று உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, சில செய்திகளை அவர்களுக்குத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

*வனப் பகுதியில் வாழ விரும்பும் யானைகள் ஒரு குறிப்பிட்ட குறுகிய எல்லைக்குள் வாழும் தன்மையில்லாதவை என்பது மட்டுமின்றி, பரந்த வனப் பகுதியில் வாழ விரும்பும் விலங்கினமாகும். யானைகள் இடப்பெயர்ச்சி பாதை–*migratory path, *வழித்தடம்-*elephant corridor, *நடமாட்டம் இவை அனைத்தும் யானைகளுக்குக் கிடைக்கும் வாழ்விட வசதி, இயற்கைச் சூழ்நிலை வசதி, தீவனத்திற்கு ஏற்ற தாவரங்கள் கிடைக்கும் இடம் ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடும். ஆகவே, யானைகளுக்கான தொன்றுதொட்டு* traditional habitat *வாழ்விடமாகவும், யானைகளின் நீண்டகால வழித்தடங்களாக இருக்கும் பகுதிகளில் மட்டுமே யானைகள் காப்பகங்கள் அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-05

இருப்பினும் சனமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட எம்.ஆர். பாளையம் காப்புக் காட்டில் சுமார் 19.80 ஹெக்டேர் பரப்பில் அமைந்துள்ள யானைகள் மீட்பு மற்றும் மறுவாழ்வு மையம், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சுற்றியுள்ள தனியார் மற்றும் கோயில் யானைகளுக்கு ஆரோக்கிய மேம்பாட்டிற்காகவும், இயற்கைத் தன்மை மாறாமல் இருப்பதற்காகவும் சீரிய முறையில் பயன்பட்டு வருகிறது. இந்த மறுவாழ்வு மையத்தில் யானைகள் தங்குவதற்கும், சத்தான உணவு தருவதற்கும், குளியல் வசதி மற்றும் மருத்துவ வசதி வழங்குவதற்கும், யானை பாகன்கள் தங்குவதற்கும் உரிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இந்த மறுவாழ்வு மையத்தினை மேம்படுத்தும் பணிகளுக்கு நடப்பாண்டிலும் ரூபாய் 37.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்ற நல்ல செய்தியையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள்.*

திருமதி மு. பரமேஸ்வரி: *மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.*

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபகாலமாக விவசாயப் பகுதிகளில் மயில்களினுடைய எண்ணிக்கை அதிமாகிவிட்டது. குறிப்பாக ஈரோடு, கோயம்புத்தூர், கரூர் மற்றும் சேலம் மாவட்டப் பகுதிகளில் விவசாய உற்பத்தியைப் பாதிக்கக்கூடிய அளவிற்கு மயில்களினுடைய எண்ணிக்கை மிக அதிகமான அளவிற்கு பெருகிவிட்டது. மயில் தேசிய பறவையாக இருக்கின்ற காரணத்தினால் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுப்பதென்று புரியாமல் விவசாயிகள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். கடுமையான வறட்சி நிலவுகிற இந்தச் சூழ்நிலையில் விவசாயிகள் செய்கிற சிறிதளவு விவசாயத்திற்கும் மயில்கள் பெருமளவில் பாதிப்பை*

2017 மார்ச் 22]

ஏற்படுத்தி விடுகின்றன. மயில்களைப் பிடித்து வனப் பகுதியில் விட வேண்டுமென்று சொன்னால் அது அவ்வளவு எளிதான காரியமாக இல்லை. மயில்களைப் பொறுத்தவரையில் அவற்றின் இனப் பெருக்கத்தைக் கட்டுபடுத்துகிற விதத்தில் இந்தத் துறையில் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிற வனத் துறை அமைச்சர் அவர்கள் அதற்குண்டான மருந்துகளை உணவுப் பொருட்களுடன் கலந்து மயில்களுக்குத் தர ஆவன செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *எதிர்காலத்தில் மயில்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தோப்பு என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள் அமைச்சராக இருந்தவர். அவர்களுக்கு இதுபற்றித் தெரியாதது ஒன்றுமில்லை. இருந்தாலும், அவருடைய தொகுதியில் இருக்கின்ற பிரச்சினையைப் பற்றி கேட்கிறார். ஏற்கெனவே மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டு, முட்டைகளை மட்டுமாவது எடுத்து ஒளித்து வைத்து மயில்களினுடைய எண்ணிக்கை பெருகாமல் பார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். இது எல்லாமே ஈரோடு மாவட்டத்திலிருந்து வருகின்ற செய்தியாக இருக்கின்றது. மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கருப்பணன் அவர்களும் எங்கு பார்த்தாலும் மயில்களினுடைய தொல்லையை தாங்க முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மயில்களை முருகனின் வாகனமாகக் கும்பிடுகிறார்கள். சில இடங்களில் இப்படி தொல்லையும் கொடுக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டவாறு விவசாயப் பகுதிகளிலிருந்து மயில்களை எப்படி அப்புறப்படுத்துவது, அவற்றின் எண்ணிக்கை அதிகமாகாமல் எவ்வாறு கட்டுப்படுத்துவது போன்றவை குறித்து ஏற்கெனவே வனத் துறை அதிகாரிகளோடு*

கலந்தாலோசித்து நல்ல முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், மயில்களினுடைய தொல்லையினால் விவசாயிகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி மேலும் மேலும் வந்து கொண்டிருப்பதால், இன்னும் வேகமாக நடவடிக்கை எடுத்து மயில்களின் பெருக்கத்தைத் தடுத்து, விவசாயிகளின் வாழ்விலே மறுமலர்ச்சியை உண்டாக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற உறுதிமொழியை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.

திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மலையோரப் பகுதிகளில் இருக்கக்கூடிய குரங்குகளுக்கு இப்போது உணவும், தண்ணீரும் கிடைக்காத காரணத்தால் மக்கள் வாழ்கின்ற குடியிருப்புப் பகுதிகளுக்குள் அவை புகுந்து பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன. அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கெனவே இந்த மலைப் பகுதியில் காடுகள் வளமாக இருக்கின்றன என்று நாம் நினைக்கின்றோம். கோட்டயம் சிக்கரி என்று சொல்லக் கூடிய வள்ளிச்செடி, அரசு இரப்பர் கார்ப்பரேஷன் மூலமாக இரப்பர் பயிர்களுக்கிடையே பயிரிடப்படுகிற ஒரு பயிர். அது, இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அடர்ந்த காடுகளில் பரவி வனப் பகுதிகளில் இருக்கக்கூடிய அனைத்து மரங்களையும் அழிக்கின்ற காரணத்தினால் வன விலங்குகளுக்கு, குறிப்பாக குரங்குகள் உண்ணுகின்ற பழ வகைகள் எதுவும் கிடைக்காத நிலையே இருக்கின்றது. எனவே, இதுகுறித்து வனத் துறை உடனடியாக ஆய்வு செய்து, கோட்டயம் சிக்கரி பயிர் அந்தப் பகுதியில் இருந்தால் உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை கொஞ்சம் சுருக்கமாகக் கேளுங்கள்.

முற்பகல் 10-10

திரு. த. மனோ தங்கராஜ்: இன்றைக்கு பல இடங்களில் Mono Culture வந்துவிட்டது. அதனாலேயே நிறைய பழ வகைகள் கிடைக்காமல் உள்ளன. கோட்டயம் சிக்கரி என்ற பயிரினை உடனடியாக நீக்கிவிட்டு, அங்கே பல்லுயிர்ப் பெருக்கத்தினை உயர்த்துகின்ற வகையில் அந்த இடத்திற்குரிய பல்வேறுதரப்பட்ட

2017 மார்ச் 22]

மரங்களை நட்டு, குரங்குகளின் தொல்லையைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே குரங்குகள் பற்றி சென்ற முறை சபையில் கேட்கப்பட்ட கேள்விகளையொட்டி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இடத்திற்கு, வனத் துறை உயர் அதிகாரிகளோடு கன்னியாகுமரி மற்றும் நாகர்கோவில் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று விசாரணை செய்து பார்வையிட்டேன். அவர் சொல்லியது நூற்றுக்கு நூறு உண்மையாக இருக்கின்றது. அப்பகுதிக்குச் செல்கின்ற கார் மற்றும் ஜீப்புகளில் அந்தக் குரங்குகள் மேலே ஏறிக்கொண்டு யாரையும் செல்லவிடாமல் தடுத்துக்கொண்டிருப்பது என்பது உண்மைதான். குரங்குகளை எப்படி அப்புறப்படுத்துவது, * அவை உயிர் வாழ்வதற்குரிய சூழ்நிலையை உருவாக்கி, அதைக் குறைப்பது, தடுப்பது குறித்து பரிசீலிக்கப்படும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பலமுறை இதனைக் கேள்வியாகக் கேட்டிருக்கிறார்கள். அது அங்கு மட்டுமல்ல, பல இடங்களில், கோயில்கள் இருக்கக்கூடிய அழகர்கோவில் மற்றும் பழனி போன்ற மலைக் கோயில்கள் இருக்கக்கூடிய பகுதிகளில், எங்கெங்கு பழங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் அந்தப் பழங்களை சாப்பிடுவதோடு, தின்பண்டங்களை சாப்பிடுகின்ற இடங்களில், இந்தக் குரங்குகள் மக்களின் கையைப் பிடித்து இழுக்கின்ற சூழ்நிலை மற்றும் உயிருக்கே ஆபத்து ஏற்படுத்துகின்ற சூழ்நிலை இருந்துகொண்டு இருக்கின்றது. இதனைத் தீவிரமாகப் பரிசீலித்து நம்முடைய வனத் துறை அதிகாரிகள் மூலமாக அவற்றை அப்புறப்படுத்துவது மற்றும் மக்களுக்குத் தொல்லை தர முடியாத அளவிற்கு தடுப்பது போன்ற நல்ல முயற்சிகளை நாங்கள் எடுப்போம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

---

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.*